*ஜூன் 3, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தைகளே, ஞான மழை என்பது ஞான கடலுடன் இருப்பவர்களுக்கு மட்டுமே. நீங்கள் தந்தையுடன் இருக்கின்றீர்கள், இல்லையா? நீங்கள் வெளிநாட்டில் அல்லது வேறு எங்காவது இருந்தீர்கள் என்றாலும், நீங்கள் அவரது சகவாசத்தில் உள்ளீர்கள். நீங்கள் அவரை நினைவு செய்கின்றீர்கள், இல்லையா? அவர் நினைவில் இருக்கும் குழந்தைகள் என்போதுமே அவருடன் இருக்கின்றார்கள். குழந்தைகள், தொடர்ந்தும் ஒரு தந்தையை நினைவு செய்கின்றார்கள். இந்த தான் மனதை ஒழுங்குபடுத்தும் மந்திரம் ஆகும்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நீங்கள் என் மீது ஞானத்தை பொழிகின்றீர்கள் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி படுத்திக்கொள்வேன். உங்கள் ஞான மழை ஆத்மாவை சுத்தமாக்கி தூய்மையாக்குகின்றது. பாபா, உங்கள் ஞான மழை என்னுடைய ஆன்மீக வாழ்க்கையை பராமரிக்கின்றது. அது என்னுடைய நற்குணங்களின் தோட்டத்தை வளர்க்க உதவுகின்றது. உங்கள் ஞான மழையின் அடியில், என்னுடைய மனதை கட்டுப்படுத்தி, தொடர்ந்தும் உங்களை நினைவு செய்கின்றேன்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: இப்போதெல்லாம் தாங்கள் இது போன்ற ஒரு அவதாரம் என்பதாக கூறிக்கொள்ளும் பல மக்கள் வெளிப்படுகின்றார்கள். இதனால்தான் உண்மையை ஸ்தாபனம் செய்வதற்கு பல தடைகள் இருக்கின்றன. எவ்வாறாயினும் "சத்திய படகு ஆடலாம், ஆனால் அது மூழ்கிபோக முடியாது." இப்போது குழந்தைகளாகிய நீங்கள் தந்தையிடம் வந்திருக்கின்றீர்கள். எனவே, நீங்கள் உங்கள் இதயங்களில் அதிகம் சந்தோஷத்தை கொண்டிருக்க வேண்டும்.

நான் ஸ்திரத்தன்மை என்னும் மனோபாவத்தை இன்று பராமரிக்க போகின்றேன். நான் சத்திய படகு ஆடலாம் ஆனால் அது மூழ்க முடியாது என்பதை புரிந்துக்கொள்கின்றேன். இந்த புரிந்துணர்வு என் உள்ளார்ந்த சீரானதன்மையையும் சாந்தத்தையும் பராமரிக்கின்றன. இந்த ஸ்திரத்தன்மை என்னும் மனோபாவத்தோடு, நான் மாயையின் புயல்கள் என்னுடைய படகை திசை திருப்பி அலைகழிக்க அனுமதிக்க மாட்டேன். நான் என்னுடைய ஸ்திரத்தன்மை என்னும் மனோபாவத்தை, நான் பாபாவிடம் வந்திருக்கின்றேன் என்பதை அறிந்துகொண்ட சந்தோஷத்தினால் போஷாக்களிக்கின்றேன்.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: தூர தேசவாசியான தந்தை, குழந்தைகளான உங்களுக்கு தூர தேசத்தை பற்றி அனைத்து ஞானத்தை கொடுப்பதற்காக வந்திருக்கின்றார். நம் பாபா தூர தேசத்திலிருந்து வந்து இந்த ஒருவரில் பிரசன்னமாகியிருக்கின்றார் என்பது உங்களுக்கு தெரியும். இது அந்நிய தேசமும் அந்நிய இராஜ்ஜியமும் ஆகும்.

**இன்று என்னுடைய திருஷ்டியில் ஆத்ம உலகையும் ஆத்ம உலகவாசியான இனிய பாபாவையும், வைத்திருக்கிறேன். என்னுடைய மனக் கண் கொண்டு, நான் மீண்டும் மீண்டும் பாபா எவ்வாறு தூர தேசத்திலிருந்து அந்நிய நாட்டிற்கு வருகின்றார் என்பதை பார்க்கின்றேன்.**

**ஓர் அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.